**தலைப்பு 213 - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைவழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார்ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி கூற்றுக்கள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தேவைப்பாடுகளுக்கு முரணான சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சுற்றறிக்கையின் 7(vi) ஆம் பந்தியின் பிரகாரம் கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதியாகக் காட்டப்பட்டுள்ள ரூபா 4,101,659,023 பெறுமதியை பூச்சியமாக்கி காட்டுவதற்காக செம்மையாக்கல் கணக்கு தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களுடன் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுநிதி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். | கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கு தயாரித்து சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) சுற்றறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏசீஏ-06 படிவத்தின் பிரகாரம் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான நிதிக்கூற்றுக்களுக்கு இணங்க ஒவ்வொரு நிலையான சொத்தும் வகைப்படுத்தப்பட்டு அந்த தொகுதியின் கீழ் | சுற்றறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் சொத்துக்களின் பெறுமதி காட்டப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் சொத்துக்கள் தொடர்பான கூற்றை தயாரிக்கும் போது ஒவ்வொரு நிலையான சொத்தும் வகைப்படுத்தப்பட்டு அந்த வகைப்படுத்தலின் |

| | | |
|---|---|---|
| சொத்துக்களின் பெறுமதியினை தனித்தனியாகக் காட்டி உப மொத்தம் காட்டப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அவ்வாறு காட்டப்பட்டிருக்கவில்லை. | | கீழ் சொத்துக்களின் பெறுமதியை தனித்தனியாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.6.2 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமற்ற பெறுவனவுகள் ரூபா 11,589,235 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் உரிய உத்தியோகத்தர்களுக்கு அது தொடர்பான சிறந்த பயிற்சிகளை வழங்குவதற்கும் அதில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை சரி செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் திணைக்களத்தின் வணிக முற்பணக் கணக்கு தொடர்பாக ஐந்தொகையில் நூல் நிலையப் புத்தகத்தின் பெறுமதி ரூபா 475,383 ஆக இருந்தும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அவ்வாறான சொத்து காட்டப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் நூல் நிலையப் புத்தகங்களின் பெறுமதியை எதிர்காலத்தில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.4 காசுப் பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப்பாய்ச்சலின் பெறுமதிகளை அவற்றின் உள்ளபடியான பெறுமதியுடன் இணக்கம் செய்த போது ரூபா 376,940,361 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, காசு வெளிபாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டுள்ள 03 செலவு விடயங்களுக்குரிய பெறுமதிகளை அவற்றின் உள்ளபடியான பெறுமதிகளுடன் இணக்கம் செய்த போதுரூபா 4,216,227,206 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. இந்த வித்தியாசத்திற்கான காரணம் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டுள்ள 02 செலவு விடயங்களின் காசு உட்பாய்ச்சல் மற்றும் 03 செலவு விடயங்களின் காசு வெளிப்பாய்ச்சலில் அவ்வாறு காணப்பட்ட வித்தியாசம் முறையே ரூபா 4,375,340,567 மற்றும் ரூபா 4,222,858,200 ஆகும். | 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் உரிய உத்தியோகத்தர்களுக்கு அது தொடர்பான சிறந்த பயிற்சியை வழங்குவதற்கும் அதில் குறிப்பிட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**1.6.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 9,500 தொகையான 2 ஆண்டுகளை மிகைத்த கடன் மீதியையும் ரூபா 55,318 தொகையான 5 ஆண்டுகளை மிகைத்த கடன் மீதியையும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆவது பிரிவில் குறிப்பிட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும். | களஞ்சிய வேலையாளர் ஈ.ஏ சுதத் ஜயலத் அவர்களை மீண்டும் சேவையில் அமர்த்தியுள்ளதனால் எதிர்காலத்தில் சம்பளத்திலிருந்து உரிய கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் உரிய வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் களஞ்சிய வேலையாளர் வை.ஐ.உடகே |

| | | | |
|---|---|---|---|
| | | | அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 9,500 கடன் மீதியை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கின்றேன். |
| (ஆ) | திணைக்களத்தின் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 534,412 மீதி காணப்பட்டதுடன் அதில் 04 ஆண்டுகளிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலத்தை மிகைத்த ரூபா 69,725 மீதியும் 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 390,167 மீதியும் காணப்பட்டன. | தாபன விதிக்கோவையின் ஓஓஐஏ ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும். | சட்டமா அதிபரின் சீ/98/2018 ஆம் இலக்க 2018-06-21 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 1.6.6 வணிக முற்பணங்கள் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புத்தக இருப்புக்களை கைதவிர்ப்புச் செய்வதிலான ரூபா 54,771,558 நட்டத்தை இலாப நட்டக் கணக்கில் ரூபா 83,680,906 ஆக ரூபா 28,909,348 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | சரியான கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாவனையிலிருந்து அகற்றி வைக்கப்பட்ட புத்தக இருப்புக்களின் பெறுமதியான ரூபா 83,680,906 பணத்திற்குச் சமனான பெறுமதியை இலாபத்திலிருந்து நீக்குதல் இலாப நட்டக் கணக்கில் பதியப்பட்டுள்ளது. |
| (ஆ) | உத்தேச கட்டணங்களை உள்ளடக்கிய பதிவுகள் கணக்குகளின் உத்தேச கட்டணங்களை கழித்ததன் பின்னர் தேறிய நட்டத்தைக் காட்டும் போது முற்பணக் கணக்குகளின் வரவு மீதிக்கான வட்டியாகிய ரூபா 6,849,330,109 மீதி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முற்பணக் கணக்குகளின் வரவு மீதிக்கான வட்டியை செம்மையாக்குதல் வேண்டும். | எதிர்காலத்தில் வட்டியை செம்மையாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஆகஸ்ட் மாதம் செலவு அறிக்கையின் பிரகாரம் ரூபா 1,681,213 தொகையான புத்தகங்களை பகிர்ந்தளிக்கும் படிகள் (அதிபர்கள்) உபசாரச் செலவுகளாகவும் ரூபா 2,220 தொகையான உபசாரச் செலவுகள் புத்தகங்களைப் பகிர்ந்தளித்தல் படி செலவுகளாகவும் பேரேட்டுக் கணக்குகளில் மாற்றல் பதிவுகளின் மூலம் செம்மையாக்கப்பட்டிருந்தது. | சரியான வகைப்படுத்தலின் கீழ் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். | தவறுதலாக இரண்டு கணக்குகளில் காசு மாற்றப்பட்டு பதியப்பட்டிருந்தது. இதற்குப் பின்னர் இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாமைக்கு கவனித்துக் கொள்ளப்படும். |
| (ஈ) | திணைக்களத்தில் ரூபா 48,962,000 பெறுமதியான 14 வாகனங்கள் காணப்பட்டிருந்தும் ரூபா 11,237,810 பெறுமதியான 02 லொறிகள் மாத்திரம் ஐந்தொகையில் வாகனங்களாகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக வாகனங்களின் பெறுமதி ரூபா 37,724,190 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களும் நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | வாகனங்களின் பெறுமதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | 2018 ஆம் ஆண்டில் அச்சகர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டு பதிவேடுகளில் தீர்த்து வைக்கப்படாத ரூபா 1,147,200 தொகையான கடன்கொடுத்தோர் மீதி 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இம்மீதிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | ஒரு தனியார் கம்பனியிடமிருந்து 2009 ஆம் ஆண்டிலிருந்து பெறவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 7,431,012 மீதியை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | இக்கடனை விரைவாக அறவீடு செய்வாற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இப்பணத்தை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) | 2018 ஆம் ஆண்டில் அச்சிடல் கட்டளைகளை வழங்கி உடன்படிக்கை செய்யப்பட்ட பணம் ரூபா 15,059,725 தொகையான 37 வகையான பாடப்புத்தகங்கள், ஆசிரியர் வழிகாட்டல்கள், மேலதிகப் புத்தகங்கள் என்பன கணக்காண்டு இறுதிவரை | முறைப்படி நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் அச்சிடப்படுதல் வேண்டும். | இது தொடர்பான விபரம் பிண்ணிணைப்புக்கள் மூலம் காட்டப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | அச்சிடப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் கொடுத்தோர் மீதிக்குள் உள்ளடக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டுகளுக்கு முன்னைய ஆண்டுகளின் கடன் கொடுத்தோர்களுக்குரிய ரூபா 2,887,230 பெறுமதியான ஆசிரியர் வழிகாட்டிகள், மேலதிகப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் என்பன 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அச்சிடப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | முறைப்படியாக நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அச்சிடப்படுதல் வேண்டும். | இதற்குரிய விபரங்கள் பின்னிணைப்புக்களின் மூலம் காட்டப்பட்டுள்ளது. |

### 1.6.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 02 கணக்குகள் தொடர்பான வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்த ரூபா 1,031,658 பெறுமதியான 123 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது சம்பந்தமாக பின்னர் உரிய ஞாபக மூட்டல்கள் மேற்கொண்டு நிதிப்பிரமாணம் 396(ஈ) இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 1647(ஆ) மற்றும் (உ) | வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் | எதிர்வரும் காலங்களில் மோட்டார் வாகனம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தமது பொறுப்பில் உள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பான பட்டியல் வைத்திருக்க வேண்டியதுடன் வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பாக முழுமையான மீளாய்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொடர்பான ஒரு பட்டியலைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் III ஆம் அத்தியாயம் மற்றும் 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடைமுறை விதிக் கோவையின் XVIII ஆம் அத்தியாயம் | அரசாங்க சேவையில் ஒரே இடத்தில் நீண்ட காலம் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு உட்படுகின்ற போதிலும், திணைக்களத்தின் சேவையில் ஈடுபட்டுள்ள கல்வி நிருவாக சேவையின் 18 உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய சேவைகளின் 15 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளிலிருந்து 22 ஆண்டுகள் வரையான காலம் தொடர்ச்சியாக திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருந்தனர். | தாபன விதிக் கோவை மற்றும் உரிய சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது நேர்முகப் பரீட்சைகளில் உயர்ந்த கல்வித் தகைமை அடைந்திருத்தல் இத்திணைக்களத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளும் போது அடிப்படையாக கவனத்திற் கொள்ளப்படுவதுடன் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக வைத்திருக்க வேண்டிய தகமைகளை விசேடமாக கவனத்தில் கொண்டு ஆட்சேர்ப்பு நடமுறைகளுக்கு இணங்க உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றார்கள். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது தேவைப்பாடுகளை சரியாக இனங்காணல் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக 05 செலவு விடயங்கள் தொடர்பான 18 சதவீதத்திலிருந்து 21 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 6.61 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் முறையான திட்டம் மற்றும் முகாமைத்துவத் துடன் மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | i. விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக பதிலீடுகள் கிடைக்காமையின் காரணமாக 2-1-1003 ஆம் செலவு விடயத்தின் நிதி ஏற்பாட்டில் சேமிப்புக்கள் காணப்பட்டன.<br>ii. 2-1-1402 மற்றும் 2-1-1409 ஆம் செலவு விடயங்களின் செலவுகள் முகாமைத்தவம் செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.<br>iii. 2-1-2401 ஆம் செலவு விடயத்தில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமைக்கு திசெம்பர் மாதத்தில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட பயிற்சித் திட்டங்களை அதேமுறையில் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தமை காரணமாக இருந்தது.<br>iv. 2-1-2104 செலவு விடயத்தின் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமைக்கு பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரிப்பதிலுள்ள சிக்கல்கள் காரணமாக இருந்தது. |

### 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் பரிசோதனை கூடத்திலுள்ள பெறுமதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத 04 வகையான பரிசோதனை | உபகரணங்கள் விளைதிறனாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். | ITI நிறுவனத்திலிருந்து பயிற்சி உத்தியோகத்தர் ஒருவரைப் பெற்று உரிய இயந்திரங்களின் |

| | | |
|---|---|---|
| உபகரணங்கள் பரிசோதனை நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படாது குறைந்த பாவனைக்கு உட்பட்டிருந்தது | | செயற்படுதன்மையை பரீட்சித்து அவற்றினை செயற்படுத்தும் முறைமையை ஆய்வு செய்து அடுத்துவரும் ஆண்டுகுளில் நியம தரங்களைப் பரீட்சிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பெறுகைகள்**

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 திசெம்பர் மாதத்தின் போது திணைக்களத்தால் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1.58 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.6.1(11) ஆம் பிரிவின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மீளாய்வு செய்து அங்கீகரிக்கப்பட்ட விவரக் குறிப்பானது கேள்விதார்களுக்கு மத்தியில் சமனான மட்டத்தில் போட்டித்தன்மையை ஏற்படுத்தும் வகையில் பொதுவான தன்மைகளை கொண்டிருக்க வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட விபரக்கு குறிப்புக்களில் நீளம் அகலம், உயரம், கனம் மூலப்பொருள் (பலகைகளின் அல்லது தகடுகளின் வகை) உரு வரைபடம் முதலிய விபரங்கள் | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் விலைமனுக்களை கோரும் போது உருவரைப் படங்களுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு விபரக்குறிப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆலோசனைகளை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | இப்பெறுகைகளுக்காக திணைக்களத்தினால் பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. விலைமனுக்களைத் திறத்தல், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல், பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல், நிறுவனங்களுக்கு கட்டளைக் கடிதங்களை அனுப்புதல், உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல், கொடுப்பனவு செய்தல் ஆகிய அனைத்து செயற்பாடுகளும் 02 நாட்களுக்குள் இடம்பெற்றிருந்தன. | திட்டங்களுடன் பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | புதிய சுற்றாடலுக்குச் செல்லும் குறிக்கோளுடன் இப்பொருட்களைக் கொள்வனவு செய்தல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்ததனாலும் பெறுகைச் செயற்பாடுகளை மிகவும் குறுகிய காலத்தில் மேற்கொள்ள வேண்டியிருந்ததனாலும் அவ்வாறு செய்யப்பட்டதுடன் மிகுதியான கொள்வனவுகள் பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டு முறைப்படியாக செய்யப்பட வேண்டுமென உரிய உத்தியோகத்தர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | 05 வருடங்களுக்காக ஆகக்குறைந்த விலைகளைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் விலைமனுக்கள் விபரக்குறிப்புக்களுடன் பொருத்தியிருக்கவில்லை எனக் காட்டி நிராகரிக்கப்பட்டிருந்தும், விலை மனுக்களைக் கோரும் போது விபரக் குறிப்புக்கள் உறுதியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது நிர்ணயிக்கப்பட்ட விபரக் குறிப்புக்களைச் சமர்ப்பித்தல் நடைமுறையில் சிக்கலானது என்பதனால் சந்தையில் உள்ள இப்பொருட்களை விற்பனை செய்கின்ற நிறுவனத்தினால் வெவ்வேறு அளவுகளிலும் தரங்களிலும் இப்பொருட்கள் விற்பனை செய்யப்படுவதனால் உரிய மாதிரிகள் வழங்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டது எனவும் அதில் பொருட்களின் விலை மாத்திரமின்றி தரம், நீண்டகாலம் நிலைத்திருத்தல் முதலிய விடயங்கள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பொருத்தமான விடயங்களை தெரிவு செய்து கொள்வனவு |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்தல் இடம்பெற்றது. |
| (ஆ) | பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிடுதலின் பெறுகை 2018/2019<br>----------------------------------------------<br>2018 ஆம் ஆண்டிற்கு தேவைப்படுகின்ற 357 வகையான பாடப்புத்தகங்களின் 27,598,600 பிரதிகளையும் 39,714,000 பிரதிகளையும் அரசாங்க மற்றும் தனியார் துறையினரால் அச்சிடும் பெறுகைகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | கேள்விகோரும் நிபந்தனைப் பத்திரத்தின் 13.3 ஆம் பந்தியின் பிரகாரம் 03 ஆண்டுகளின் கணக்காய்வு செய்த கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 06 நிறுவனங்கள் அத் தேவைப்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கேள்வி கோரும் நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கேள்வி கோரும் போது நிபந்தனைப் பத்திரத்தின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு அச்சகங்களின் கணக்குகள் தொடர்பாக அவதானிப்பு மேற்கொள்கின்றது. ஒவ்வொரு அச்சகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்புப் பத்திரத்தின் பகுப்பாய்வு மற்றும் அச்சகங்களின் மேற்பார்வை தகவல் பத்தரங்களில் கவனம் செலுத்தப்படுகின்றது. |
| (ii) | உயர்ந்த தரத்தினையுடைய பாடப்புத்தகங்களை அச்சிடும் போது அச்சகர்களை மதிப்பீடு செய்வதற்கான 04 பருமனளவுகளுக்காக வழங்கப்படுகின்ற உச்ச அளவு புள்ளி சதவீதம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. கேள்விதாரர்கள் போட்டி விலைகளைச் சமர்ப்பித்த சந்தர்ப்பங்களில் அச்சிடல் வழங்குனர்களைத் தெரிவுசெய்வதற்காக பின்பற்றப்பட்ட நடைமுறைகள் தொடர்பாக பெறுகை நிபந்தனைகளில் | பெறுகை நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கேள்விதாரர்கள் சமர்ப்பித்த விலைமனுக்களை கவனத்திற்கு எடுத்துக்கொண்ட போது அதிக பெறுமதியினைக் கொண்டுள்ளதாக பெறுகைக்குழுவால் கவனம் செலுத்தி கலந்துரையாடப்பட்டதன் பின்னர் அரசாங்கத்திற்கு நலன் தரும் நியாயமான விலை நிலைமைக்கு திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடைமுறைகள் பின்பற்றப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) | 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டின் போது அரசாங்க நிறுவனங்களுக்கு அச்சிடலுக்காக வழங்கப்பட்டுள்ள பாடப்புத்தகங்களின் அளவு 14 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. | அரசாங்க நிறுவனங்களில் காணப்படுகின்ற வளங்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அரசாங்க நிறுனங்களுக்கு புத்தகங்களில் குறிப்பிட்ட அளவை அச்சிடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக பொருத்தமான வேலைத்திட்டம் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் அரசாங்க அச்சக திணைக்களத்திற்கும் அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்திற்கும் திறந்த பெறுகை நடைமுறைகளுக்குப் புறம்பாக புத்தகங்களை அச்சிடல் வழங்கப்பட்டிருந்தது. |
| (iv) | 2018 ஆம் ஆண்டில் புதிய சிபார்சுகளின் கீழ் அச்சிடப்டுகின்ற 56 பாடப்புத்தகங்களின் பிரதிகளின் அளவு 9,417,000 ஆக இருந்த போதிலும் அந்த அச்சிடல் எதுவும் அரசாங்க துறைக்கு வழங்கப்படவில்லை | - மேற்படி - | அரசாங்க அச்சிடல் கூட்டுத்தாபனத்தில் உள்ள இயந்திரங்களின் இயலளவிற்கு சமமான வகையில் அந்த நிறுவனத்திற்கு அச்சிடுவதற்கு இயலுமான பாடப்புத்தகங்களை மாத்திரம் தெரிவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. |
| (v) | 2018 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தினால் 2019 ஆம் அண்டிற்காக ரூபா 3,499.25 மில்லியன் பெறுமதியான 419 புத்தகங்களின் 39,714,000 பிரதிகளை 02 அரசாங்க நிறுவனங்கள் மற்றும் 27 தனியார் அச்சகர்களிடமிருந்து அச்சிட்டு பெற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. இதன் போது ஒரு ஆணையாளர் மற்றும் இரண்டு பிரதி ஆணையாளர்களை உள்ளடக்கிய ஒரு குழு பெயரிடப்பட்டு அக்குழுவின் சிபார்சின் பேரில் பல சந்தர்ப்பங்களில் அச்சகர்களுக்கு | பெறுகைக் குழுவின் அங்கீகாரத்துடன் தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பாடசாலை பாடப்புத்தகங்களை வழங்கும் அரசாங்க கொள்கையை அமுல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை திட்டமிடும் போது அனைத்து மாணவர்களுக்கும் சிங்கம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் உரிய பாடப் புத்தகங்களை தாமதமின்றி பெறுகை செய்து பகிர்ந்தளித்தல் திணைக்களத்தின் முன்னணி செயற்பாடாக இருந்ததுடன் அச்சிடல் நிறுவனம் எதாவது சிக்கல்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | பாடப்புத்தகங்கள் அச்சிடுவதற்காக பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தும் அதற்காக அமைச்சரவை பெறுகை குழுவின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | முகங்கொடுத்து கட்டளைகள் பெற்றுக்கொள்ளப்பட்ட பாடப்புத்தகங்கள் அச்சிடப்படாத சந்தர்ப்பங்களின் போது உடன்படிக்கையின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (vi) | இக்குழுவின் மூலம் கேள்வி வழங்கப்பட்ட 02 நிறுவனங்களால் கேள்வியை வழங்கி 03 மாதங்களுக்குப் பின்னர் 05 புத்தகங்களின் 586 பிரதிகளை அச்சிடுதல் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக ஏனைய 04 அச்சிடல் நிறுவனங்களால் மீண்டும் அச்சிடப்பட்டிருந்தது. அச்சிடல் கட்டளையில் கேள்வி பாதுகாப்பு அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் இவ்வாறு கேள்விகளை நிராகரிப்பதன் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களை நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் வழங்குவதற்கு முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் அச்சிடல் நடவடிக்கைகளை ஒப்படைக்கும் போது இவ்வாறான அச்சிடல் நிறுவனங்கள் தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து பார்த்து தீர்மானம் எடுத்தல் வேண்டும். | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் பிரகாரம் கடிதங்களை பரிமாற்றம் செய்தல் இடம்பெற்றிருந்த போதிலும் தாமதமின்றி இப் புத்தகங்களை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (vii) | 2018 ஒக்தோபர் 25 ஆந் திகதிய செயற்பாட்டுக்குழு அறிக்கையின் பிரகாரம் திணைக்கள தரப்பினர்களால் ஏற்பட்ட தாமதம் 50 நாட்களை விட மிகைத்த சந்தர்ப்பங்களில் உரிய விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் களிடமிருந்து தாமதத்திற்கு காரணமான விடயங்கள் தொடர்பாக அறிக்கையைப் பெற்றுக்கொள்ளல் இடம்பெற வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர் களிடமிருந்து தாமதத்திற்கு காரணமான விடயங்கள் தொடர்பாக அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்பொழுது இப் புத்தகங்கள் தொடர்பாக உரிய விடயங்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கை பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் தாமதமின்றி இந்த உத்தியோகத்தர்களின் அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (viii) | திணைக்களத்தின் செயற்பாட்டுக்குழு அறிக்கையின் பிரகாரம் பாடப்புத்தகங்களை வழங்கும் போது இடம்பெற்ற தாமதங்களுக்காக 9 நாட்களிலிருந்து 55 நாட்கள் வரை அச்சிடல தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் சில சந்தர்ப்பங்களில் அச்சிடல் தாமதத்தினை விட மிகையான நாட்கள் அதாவது 14 நாட்களிலிருந்து 97 நாட்கள் வரை திணைக்களத்தின் தாமதமாகக் கருதி தண்டப்பணத்தை அறவீடு செய்வதிலிருந்து விடுதலை வழங்கப்பட்டிருந்தது. | தண்டப்பணத்தை அறவீடு செய்தல் முறைப்படியாகச் செய்யப்படுதல் வேண்டும். | திணைக்களத்தின் செயற்பாட்டுக்குழு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட தாமதமாகிய புத்தகங்களை வழங்கியுள்ள அச்சுக்களில் திணைக்களத்தின் தாமதத்திற்கான விபரம் காட்டப்பட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | பாடப்புத்தகங்களை பகிந்தளிப்பது சம்பந்தமாக கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் 2017 மே 31 ஆந் திகதிய 2017/09 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தியின் பிரகாரம் களஞ்சியங்களில் மிகையாக புத்தகங்களை களஞ்சியப்படுத்தி வைத்தல் இடம்பெறாத வகையில் அத்தியாவசியமான பாடப்புத்தகங்களை மாத்திரம் சரியாக கணித்து வேண்டுகோள் விடுவதற்கு பாடசாலைகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும் கொழும்பு மாவட்டத்திலுள்ள 11 | பாடப்புத்தகங்களின் தேவைப்பாட்டை சரியாகத் தீர்மானித்து உச்ச அளவு செயற்றிறனுடன் பாடப் புத்தகங்களை வழங்குதல் வேண்டும். | பாடசாலைகளால் கட்டளைப் பதிவேடுகள் மற்றும் மேலதிக கடிதங்களின் மூலம் பாடப்புத்தகங்ள் வேண்டப்படுவதுடன் சில சந்தர்ப்பங்களில் எதாவது தாமதத் தவறுகள் எற்படுகின்றது. எதிர்காலத்தில் அவ்வாறான சிக்கல்களை தீர்த்து முறைப்படியாக கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | பாடசாலைகளுக்கு தேவைப்பாட்டினை மிகைத்து 10,540 பாடப்புத்தகங்கள் திணைக்களத்தால் மிகையாக வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | பாடசாலைகளின் தேவைப்பாட்டின் பிரகாரம் பாடப்புத்தகங்களை சரியான அளவில் கட்டளையிடப்படாததன் காரணமாக 2018 ஆம் ஆண்டிற்காகத் தேவைப்படுகின்ற பாடப்புத்தகங்கள் மாணவர்களின் கைக்கு கிடைப்பதற்கு 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தும் கொழும்பு மாவட்டத்திலுள்ள 08 பாடசாலைகள் 13,194 பாடப்புத்தகங்களை பாவனைக்கு எடுத்துக் கொள்ளாது களஞ்சியப்படுத்தியிருந்தது. | பாடப்புத்தகங்களின் தேவைப்பாட்டை சரியாகத் தீர்மானித்து வளங்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். | சில சந்தர்ப்பங்களில் அதாவது தாமதத் தவறுகள் ஏற்படுவதுடன் எதிர்காலத்தில் அவ்வாறான சிக்கல்களைத் தவிர்த்து முறைப்படியாக கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான திட்டங்கள் தயரிக்கப்பட்டு வருகின்றன. |
| (ஆ) | பாடப் புத்தகங்களுக்கான தரத்தை பரீட்சித்தல்<br>-----------------------------------------------<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 2019 ஆம் ஆண்டிற்காக 2018 ஆம் ஆண்டின் போது அச்சிடப்பட்ட புத்தகங்களின் வெளிக் கவரையும் உள் கடதாசிகளையும் திணைக்களம் நிர்ணயித்துள்ள விபரக்குறிப்புக்களின் பிரகாரம் அச்சிட்டு களஞ்சிய அங்கீகாரத்தையும் வழங்கும் போது பரீட்சிக்கப்பட வேண்டிய Tensile Index பரிசோதனையானது எப்புத்தககங்கள் சம்பந்தமாகவும் மேற்கொள்ளப் | முறைப்படியான தரப்பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுத ல் வேண்டும் | கடதாசிகளின் Tensile Index பரிசோதனையானது அவை அச்சிடப்படுவதற்கு முன்பாகவே மேற்கொள்ளப்படுகின்றது. அச்சிடுவதற்காக இயந்திரங்களில் போடப்பட்டதன் பின்னர் மற்றும் எழுத்துக்கள் அச்சிடப்பட்டதன் பின்னர் கடதாசிகளின் தரம் மாற்றமடையும். எனவே. அச்சிடப்படுவதற்காக எடுக்கப்படுகின்ற கடதாசிகளின் தர பரிசோதனையின் போது இப் பண்புகள் பரீட்சிக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | பட்டிருக்கவில்லை | | |
| (ii) | 2018 யூலை 01 ஆந் திகதியிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அச்சிடல் வழங்குனர்களின் மூலம் அச்சிடப்படுகின்ற புத்தகங்களின் அச்சிடல் மற்றும் களஞ்சிய அங்கீகாரத்தை வழங்கும் போது போதியளவு எண்ணிக்கையான மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. | போதியளவு எண்ணிக்கையான மாதிரிகள் பரீட்சிக்கப்படுதல் வேண்டும். | பாடப்புத்தகங்களின் இருப்புக்களை அச்சிடுவதற்கு முன்னர் முன்பக்க பிரதிகள் திணைக்களத்தின் உற்பத்திப் பிரிவிற்கு வழங்கப்படுவதுடன் அப்பிரதிகளில் ஒரு மாதிரி பரிசோதனைக்கு உட்டுத்தப்படுகின்றது. |
| (iii) | 2006 சனவரி 25 ஆந் திகதிய அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.6.3 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்ற நியமங்கள் இயலுமான அளவு உச்ச அளவில் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் 04 தரப்பரிசோதனை விவரக் குறிப்புக்களுக்குரிய தரப்பரிசோதனைகளும் பரிசோதனை நடைமுறைகளும் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நியமங்கள் ISO நியமங்களுக்கு இணங்கியுள்ளதுடன் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்குரிய இயந்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் போது ISO நியமங்களுக்கு இணங்க இயந்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (iv) | 2010 ஆம் ஆண்டில் ரூபா 3.35 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ள Techni Dyne Color Spectrophotometer உபகரணம் திணைக்களத்தின் ஆய்வுகூடத்தில் Brightness and Opacity அளவீடு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் 04 ஆந் திகதியிலிருந்து இந்த இயந்திரத்தை சேவை செய்யப்படாமையின் காரணமாக 2019 ஆம் ஆண்டிற்காக 2018 ஆம் | விரைவாக இயந்திரங்களை திருத்தம் செய்து முறையாக தரப்பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். | Brightness மற்றும் Opacity யை அளவை செய்வதற்காகப் பயன்படுத்துகின்ற இயந்திரங்கள் தற்போழுது செயற்பாடற்றுக் காணப்படுவதுடன் இதனை திருத்தம் செய்வது தொடர்பான சிக்கல் உருவாகி உள்ளது எனவும் அது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு மேலதிக நடவடிக்கைகளுக்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் போது அச்சிடப்பட்ட எப் பாடப்புத்தகத்திலும் Brightness and Opecity என்ற விபரக்குறிப்புக்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை | | |
| (இ) | புதிய பாடவிதானத்துக்கு இணங்க தயாரித்த 3 ஆம் தரத்தின் ஆங்கிலப் பாடத்துக்கான புத்தகம்<br>----------------------------------------------<br>2018 ஆம் ஆண்டின் போது பகிர்ந்தளிப்பதற்காக புதிய பாடவிதானத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட 3 ஆம் தர ஆங்கில வேலைப் புத்தகம், ஆங்கில எழுத்துப் புத்தகம், ஆங்கில பாடப் புத்தகம் என்பன பிழைகள் உள்ளதன் காரணமாக 2019 ஆம் ஆண்டின் போது மீண்டும் ஒரு தடவை திருத்தம் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக 2018 ஆம் ஆண்டின் தேவைப்பாட்டினை விட மிகையாக அச்சிடப்பட்ட ரூபா 5.72 மில்லியன் பெறுமதியான 27,275 புத்தகங்கள் மாணவர்களின் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது அகற்றப்பட்டிருந்தது. | சரியான பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதன் மூலம் அரசாங்க பணத்தை வீண்விரயம் செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பாட விதானங்களில் காணப்படுகின்ற பிழைகளுகடனான நிலையில் புத்தகங்களைத் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2017 ஆம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவனத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சில எழுத்துக்களின் வடிவங்கள் 2018 ஆம் ஆண்டின் போது திருத்தம் செய்யப்பட்டதனால் 03 ஆம் தரத்தின் ஆங்கிலப் பாடத்திற்கான புத்தகத்தை மீண்டும் திருத்தம் செய்யும் தேவைப்பாடு உருவாகியுள்ளதுடன் தொடக்க சந்தர்ப்பத்தில் அச்சிடப்பட்ட பாடப் புத்தகங்களை பாடசாலைகளுக்கு பரிந்தளிப்பது தொடர்பான சிக்கல் நிலை உருவாகியுள்ளதனால் இப் பாடப்புத்தகங்கள் களஞ்சியத்தில் எஞ்சியுள்ளன. |
| (ஈ) | வருடாந்த பாடப்புத்தக தேவைப்பாட்டைத் தீர்மானித்தல்<br>----------------------------------------------<br>2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை அச்சிடப்பட்ட பாடப் புத்தகங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட எண்ணிக்கை முறையே 42,192,500 27,598,600 மற்றும் 39,714,000 ஆக இருந்ததுடன் அதற்கான செலவு ரூபா 10,697 மில்லியனாகும். இது சம்பந்தமாக பின்வரும் | | |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | வருடாந்தம் பாடப் புத்தகங்களின் கட்டளைகளைத் தீர்மானிக்கும் போது கவனிக்கப்பட வேண்டிய பல விடயங்கள் சம்பந்தமாக கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட வில்லை. | சரியாக பாடப்புத்தகங்களின் தேவைப்பாட்டை தீர்மானித்தல் வேண்டும். | பாடப்புத்தகங்களின் தேவைப்பாட்டைத் தீர்மானிக்கும் போது பகிர்ந்தளிக்கும் கிளை, சந்தை மேம்பாட்டு கிளை என்பன வழங்கின்ற தேவைப்பாட்டை போல ஒவ்வொரு ஆண்டு இறுதியின் போதும் பேணப்படுகின்ற இருப்பு மீளாய்வு அறிக்கைகளின் தகவல்களும் நடமாடும் சேவைகளை நடாத்துதலின் மீளாய்வு அறிக்கைகளும் புத்தக கண்காட்சிகள் மற்றும் வணிக காட்சிப்படுத்தல்கள் நடாத்துவதன் மூலம் பெற்றுக்கொள்கின்ற தரவுகளும் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன. |
| (ii) | 10,194 அரசாங்க பாடசாலைகளிலுள்ள மாணவர்களின் வருடாந்த பாடப்புத்தக தேவைப்பாடு தொடர்பான தகவல்கள் கட்டளைப் பதிவேட்டின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு அத்தகவல்களை பொழிப்பாக்கி வருடாந்த பாட புத்தகங்களின் தேவைப்பாடு தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் அச்சிடலுக்கான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரை உரிய தீர்மானம் எடுப்பதற்காக அப் பொழிப்புக்கள் தயாரிக்கப்படவில்லை. | சரியான பாடப்புத்தகங்களின் தேவைப்பாட்டை தீர்மானித்தல் வேண்டும். | முன்னைய ஆண்டுகளின் போது பாடப் புத்தகங்களின் தேவைப்பாடு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் போது அந்த ஆண்டுகளுக்கான கட்டளைகள் ஏடுகளின் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் இடம்பெற்ற போதிலும் அத்தரவுப் பதிவேடுகளில் தாமதங்கள் ஏற்படுகின்ற வேளைகளில் முன்னைய ஆண்டுகளுக்கான கட்டளைப் பதிவேடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கைப் பதிவேட்டின் பிரகாரம் பாடப்புத்தகங்களை அச்சிடும் தேவைப்பாடு தீர்மானிக்கப்படுவதாகவும் எதிர்காலத்தில் இந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்வதனை முன்னிட்டு கணனி தரவு மென்பொருட்களைத் தயாரிப்பதற்கான |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (iii) | பாடப்புத்தகங்களின் தேவைப்பாட்டைத் தீர்மானிக்கும் போது கல்வி அமைச்சின் புள்ளிவிபரப் பிரிவினால் தயாரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பாடத்தையும் கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொண்டதற்கான சான்றுகள் இருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டின் போது சாதாரண தரப் பரீட்சைக்கு முதல் தடவையாக விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கையையும் வருடாந்த புத்தக கட்டளைகளையும் ஒப்பீடு செய்த போது 57 பாடங்களலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை 2,441,503 ஆக இருந்ததுடன் 10 ஆம் தரத்திற்காக கட்டளையிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை 3,467,000 ஆகும். அதற்கிணங்க 1,025,497 புத்தகங்கள் அல்லது 42 சதவீதம் தேவைப்பாட்டை மிகைத்து அச்சிடப்பட்டிருந்தது. | சரியாக பாடப்புத்தகங்களின் தேவைப்பாட்டை தீர்மானித்தல் வேண்டும். | சர்வதேச பாடசாலைகளின் தேவைப்பாடு, இயற்கை அனர்த்தங்கள், கண்காட்சி செயலமர்வுகள், விற்பனை மேம்பாடுகள் ஆகிய விடயங்கள், 2020 ஆம் ஆண்டிற்கான பாடப்புத்தக தேவைப்பாட்டு பதிவேட்டைத் தயாரிக்கும் போது கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகளைப் போல பாடசாலைகளிலிருந்து முன்னைய ஆண்டுகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டளைப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்ட தகவல்களும் அடிப்படையாக் கொள்ளப்பட்டது. |
| (உ) | பாடப்புத்தகங்களின் மேலதிக கட்டளைகளை அச்சிடுதல்<br>----------------------------------------------- | | |
| (i) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கான தொடக்க கடடளைகளின் தேவைப்பாடு சரியாக தீர்மானிக்கப் பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, 2017 ஆம் ஆண்டின் போது தொடக்க கட்டளைகளின் பின்னர் மூன்று மேலதிக கட்டளைகள் வழங்கப்பட்டு | தொடக்க சந்தர்ப்பத்தின் போது சரியாக பாடப்புத்தகங்களின் தேவைப்பாட்டை தீர்மானிப்பதன் மூலம் மேலதிக கட்டளைகளை அச்சிடுவதனைக் குறைத்துக் கொள்ள வேண்டும். | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கான தேவைப்பாட்டினைத் தீர்மானித்து தொடக்க கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தும் பல்வேறு காரணங்களால் செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் மீண்டும் கட்டளைகளை |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 399.59 மில்லியன் பெறுமதியான 2,946,700 பாடப்புத்தகங்களும் 2018 ஆம் ஆண்டின் போது தொடக்க கட்டளைகளின் பின்னர் மூன்று மேலதிக கட்டளைகளின் மூலம் ரூபா 109.4 மில்லியன் பெறுமதியான 1,215,300 பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டன. | | வழங்க வேண்டியிருந்தது. |
| (ii) | 103 வகையான பாடப்புத்தகங்களின் 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகை விலை மனுக்கள் 2017 ஆம் ஆண்டிற்கான விலைகளை விட 44 சதவீதத்திலிருந்து 257 சதவீதம் வரையான அளவில் அதிகரித்திருந்ததுடன் 70 வகையான புத்தகங்கள் 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகை விலை மனுக்கள் 2018 ஆம் ஆண்டிறான அச்சிடல் விலைகளை விட 12 சதவீதத்திலிருந்து 58 சதவீதம் வரையான அளவில் குறைவடைந்திருந்தது. 2018 ஆம் ஆண்டில் அச்சிட்ட மொத்த பிரதிகளின் எண்ணிக்கை 30,650,300 ஆக இருந்ததுடன் அந்த அளவு 2019 ஆம் ஆண்டில் அச்சிட்ட பிரதிகளின் எண்ணிக்கையை விட 10,279,000 பிரதிகளால் குறைவாகும். அவ்வாறாயினும் 2018 ஆம் ஆண்டின் போது பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்காக ரூபா 3,908.22 மில்லியன் அதிக கிரயம் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அது 2019 ஆம் ஆண்டிற்கான கிரயத்தை விட ரூபா 325.65 மில்லியனால் அதிகரிப்பதாகும். பிரதிகளின் எண்ணிக்கை குறைவடைதல் கிரயம் அதிகரிப்பதற்கு காரணம் என திணைக்களம் குறிப்பிட்டிருந்தும் 2019 ஆம் | பாடப்புத்தகங்களை அச்சிடும் போது அரசாங்க நிதிகள் மிகவும் விளைதிறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். | 2017/2018 ஆண்டுகளில் புத்தகங்களை அச்சிடும் போது திறந்த பெறுகை முறைமை பின்பற்றப்பட்டிருந்தது. பத்திரிகை அறிவித்தல்களை பிரசித்தப்படுத்தி கோரப்பட்ட விலை மனுக்கள் அரசாங்க நிதி திணைக்களத்தின் மூலம் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்படுத்தி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஆண்டிற்காக அச்சிட வேண்டிய பாடப்புத்தகங்களின் அளவின் பிரகாரம் பெறுகை நடைமுறையின் போது சமர்ப்பிக்கப்படுகின்ற விலை மனுக்கள் புத்தகத்திற்குப் புத்தகம் குறைவடைதல் அதிகரித்தல் எற்படுவதும் கிரய முரண்பாட்டிற்கான காரணத்திற்கான விடயங்கள் இதற்காக தாக்கமளித்திருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் போது பாடப்புத்தகங்களின் கிரயம் குறைவடைந்திருந்தும் 2018 ஆம் ஆண்டில் பாடப்புத்தகங்களின் கிரயம் இவ்வாறு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தல் சச்சரவுத் தன்மையான விடயமாகும். | | |
| (ஊ) | பாடவிதானங்கள் தாமதமாகி கிடைத்ததன் காரணமாக பாடப்புத்தகங்களை அச்சிடல் தாமததடைதல்<br>-----------------------------------------------<br>2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது திருத்தப்பட்ட பாட விதானங்களை நியாயமான காலத்தில் திணைக்களத்திற்கு கிடைத்திருக்காததன் காரணமாக நிர்ணிக்கப்பட்ட காலத்தில் பாடப்புத்தகங்களை மாணவர்களின் கையில் கிடைக்கச் செய்வதற்கு முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதற்காக நியாயமான கால எல்லைக்கு முன்னர் பாட விதானங்களை தேசிய கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்பது அவதானிக்கப்படவில்லை. | பாட விதானங்களை நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பாடப் புத்தகங்களின் விடய உள்ளடக்கத்தை தயாரிப்பதற்காக பாட விதானங்கள் ஆசிரியர் கையேடுகள் மற்றும் ஏனைய பிரதிகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் தேசிய கல்வி நிறுவனத்தில் உரிய உத்தியோகத்தர்களுக்கு தற்பொழுது கடிதத்தின் மூலம் தெரியப்படுத்துதல் இடம்பெற்றது. |
| (எ) | பாடப் புத்தகங்களை வழங்குனர்களிடமிருந்து தண்டப்பணத்தை அறவீடு செய்தலும் பக்கங்களின் குறைவு அதிகரிப்பிற்காக கொடுப்பனவு செய்தலும்<br>-----------------------------------------------<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 2018 ஆம் ஆண்டு விபரக்குறிப்பு குழு அறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் 6, 7, 8, | எதிர்வரும் பெறுகை நடவடிக்கைகளின் போது | கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தால் 410 வகையான பாடப்புத்தகங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | 9 ஆம் தரங்களுக்கான பாடப் புத்தங்களை மீண்டும் பயன்படுத்துதல் 50 சதவீதம் வரை அதிகரித்ததன் காரணமாக கடதாசிகளின் தரத்தை அதிகரிக்கச் செய்வதற்கு பிரகாசத்தின் பெறுமதியை 85 சதவீதம் வரை மேம்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தும் 2017 ஆம் ஆண்டின் போது 2018 ஆம் ஆண்டிற்காக அச்சிடப்பட்டு மொத்தமாக 357 வகையான புத்தகங்களில் 106 வகையான புத்தகங்களின் பிரகாசத்தை மாற்றியதன் காரணமாக ரூபா 6.13 மில்லியன் தண்டப்பணம் அறவிடப்பட்டிருந்தது. | அச்சகர்களுக்கு புள்ளிகள் வழங்குகையில் தரமான புத்தகங்களை வழங்கும் கடந்த செயலாற்றல் தொடர்பாக கவனம் செலுத்தி புள்ளிகள் வழங்கும் நடைமுறையை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். | வருடாந்தம் அச்சிடப்பட்டு பரிந்தளிக்கப்படுவதுடன் 6, 7, 8 மற்றும் 9 ஆம் தரங்களுக்கான பாடப்புத்தகங்கள் மீண்டும் பயன்பாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவதடன் அதற்காக கருதுகோள் விளக்கத்தை வழங்குவதற்கும் மீண்டும் பயன்படுத்தும் பொறிமுறையை முறைமைப்படுத்துவதற்கும் ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதிக தரமுள்ள புத்தகங்களை பெற்றுக்கொள்வதற்காக திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | 2018 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையில் தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் பக்கங்கள் அதிகரித்தல் 10 இலிருந்து 46 வரையான அளவுகளுக்காக ரூபா 72.86 மில்லியன் பணம் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பக்கங்கள் குறைவடைதல் 10 இலிருந்து 32 வரையான அளவுக்காக ரூபா 39.37 மில்லியன் குறைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 10 பக்கங்களுக்கு மேற்பட்ட அளவில் குறைவடைதல் மற்றும் அதிகரித்தலின் போது பாடப் புத்தகங்களில் உள்ளடங்கியுள்ள மாற்றங்களின் அடிப்படையில் மாணவர்கள் சிக்கலுக்கு உள்ளாகக் கூடியதனால் கொடுப்பனவு செய்யும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை | எதிர்வரும் பெறுகை நடவடிக்கைகளின் போது அச்சகர்களுக்கு புள்ளிகள் வழங்கும் போது தரமான புத்தகங்களை வழங்கும் கடந்த செயலாற்றல் தொடர்பாக கவனம் செலுத்தி புள்ளிகள் வழங்கும் நடைமுறைகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கற்றல் நடைமுறைகளை வெற்றியளிக்கச் செய்யும் நடைமுறைக்கு முன்னர் பாடப் புத்தகங்களை திட்டமிடல் சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை உத்தேச திட்டமிடலாகும். பல்தேர்வு வினாக்கள், திறந்த வினாக்கள், கட்டமைக்கப்பட்ட இணைந்த வினாக்கள் நில உருவப்படங்கள், படங்கள், உருவரிப்படங்கள், அட்டவணைகள், கணித வாய்ப்பாடுகள், நடைமுறைப் பயிற்சிகள் புதிரிடுதல் ஆகிய துணை தோற்றுவாய்களின் ஒன்று சேர்த்தல்கள் / கழித்தல்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதான முரண்களின் அடிப்படையில் புத்தகங்களை தொகுத்து பூர்த்தி செய்யும் போது தொடக்கத்தில் திட்டமிடப்பட்ட புள்ளி விபரங்கள் மாற்றமடைகின்ற சந்தர்ப்பங்கள் நடைமுறையில் |

| | | | |
|---|---|---|---|
| | என்பது அவதானிக்கப்பட்டது. | | ஏற்படுவதாகும். |
| (ஏ) | பழுதடைந்த புத்தகங்களை கைதவிர்ப்புச் செய்தல்<br>------------------------------------------------<br>பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | வருடாந்த புத்தகங்களின் தேவைப்பாட்டை சரியாக அடையாளம் காணாமையின் காரணமாக மிகையான புத்தக இருப்புக்கள் அதிகரித்துச் செல்வதைப் போல அப் புத்தகங்களை களஞ்சியப்படுத்துவதிலுள்ள பலவீனங்களின் காரணமாக 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பாடப் புத்தகங்கள் ஆசிரியர் கையேடுகள் மேலதிக புத்தகங்கள் என்பன 1,190,691 அளவில் கைதவிர்ப்புச் செய்யப்பட்டன. | முடியுமான அளவு சரியான பாடப் புத்தகங்களின் தேவைப்பாட்டை தீர்மானித்து புத்தகங்களை அச்சிடுதல் மற்றும் களஞ்சியப்படுத்தல் வேண்டும். | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட பாடப் புத்தகங்கள் தொடர்பான ஒரு பகுப்பாய்வானது பின்னிணைப்பின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. 1999 ஆம் ஆண்டிலிருந்து பல ஆண்டுகளாக பாட விதானங்கள் மாற்றமடைந்து பாடப் புத்தகங்கள் இவ்வாறு கைதவிர்ப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் அப் பாடப்புத்தகங்கள் தொடர்பான விபரம் இதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.<br>அந்த அந்த ஆண்டுகளில் பாட விதானங்கள் மாற்றமடைந்த 03 ஆந் தரம் மற்றும் 09 ஆந் தரங்களின் பாடப்புத்தகங்கள் அதிக அளவில் இவ்வாறு கைதவிர்ப்பிற்கு உட்பட்டிருந்தன. |
| (ii) | சரியான தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பாடப் புத்தகங்கள் அச்சிடப்படாததன் காரணமாக பாட விதானங்களை திருத்தம் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டிற்கு முன்னைய ஆண்டின் போது பயன்பாட்டிற்காக பாடசாலைகளால் வேண்டிக்கொள்ளப்பட்ட அளவையும் மிகைத்து திணைக்களத்தால் பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டதன் காரணமாக 265,223 பாடப் புத்தகங்கள் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தன. | பாட விதானங்களை திருத்தம் செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டிற்கு முன்னைய ஆண்டில் பாடப் புத்தகங்களை அச்சிடும் போது மிகவும் சிக்கனமாக புத்தகங்களை அச்சிடுதல் வேண்டும். | எதிர்காலத்தில் அச்சிடப்பட வேண்டிய சரியான பாடப்புத்தகங்களின் அளவைத் தீர்மானிப்பதற்காக சரியான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் திட்டமிட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2018 ஆம் ஆண்டின் போது பிரிவேனாக்களில் பாடவிதானங்கள் திருத்தப்பட்டதன் காரணமாக 2017 ஆம் ஆண்டிற்காக அச்சிடப்பட்ட ரூபா 4.97 மில்லியன் பெறுமதியான 39,366 பிரிவேனா பாடப்புத்தகங்கள் பிடிபன A களஞ்சியத்தில் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தன. | பாட விதானங்களைத் திருத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டிற்கு முன்னைய ஆண்டில் பாடப் புத்தகங்களை அச்சிடும் போது மிகவும் சிக்கனமாக புத்தகங்களை அச்சிடுதல் வேண்டும். | அச்சிடப்பட்ட புத்தகங்களின் அளவு தொடக்க வேண்டுதலை விட பின்னர் மாற்றப்பட்டதனால் புத்தக இருப்பு எஞ்சியிருந்தது என தெரிவிக்கப்பட்டது. |
| (iv) | பிடிபன B பிரதிகள் நடுஹேன புத்தக களஞ்சியங்களில் 2018 திசெம்பர் 15 ஆந் திகதியளவில் காணப்பட்ட ரூபா 205.29 மில்லியன் பெறுமதியான 1,545,883 அளவான மேலதிகப் புத்தகங்கள் முதலில் பெற்றவை முதலில் வழங்குதல் முறைமையின் (FIFO) பிரகாரம் களஞ்சியப்படுத்தப் படாமையின் காரணமாக புத்தகங்கள் வீண் விரயம் செய்யப்படுதல் இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | புத்தகங்களை முறைப்படியாக களஞ்சியப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு 2019 மே 15 ஆந் திகதி ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் கல்வி அமைச்சு செயலாளரின் மேலதிக ஆலோசனைகளுக்காக அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. |
| (v) | 2018 திசெம்பர் 15 இல் உள்ளவாறு பிடிபன மற்றும் நடுஹேன களஞ்சியங்களில் ரூபா 217.31 மில்லியன் பெறுமதியான மெதுவான அசைவுள்ள 1,105,418 அளவான மேலதிகப் புத்தகங்கள் காணப்பட்டன என்பது அவதானிக்கப்பட்டதுடன் அப்புத்தகங்களை களஞ்சியப்படுத்துவதிலுள்ள பலவீனங்கள் மற்றும் நீண்ட காலமாக களஞ்சியத்தில் | புத்தகங்களை முறைப்படியாக களஞ்சியப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கான ஒரு அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு 2019 மே 15 ஆந் திகதி ஒரு குழு நியமிக்கப்பட்டதுடன் அந்த அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் கல்வி அமைச்சு செயலாளரின் மேலதிக ஆலோசனைகளுக்காக அனுப்பி வைப்பதற்காக திட்டமிடப்படுவதாகவும் எதிர்காலத்தில் அவ்வாறான |

| | | |
|---|---|---|
| அடுக்கி வைத்திருத்தல் போன்ற விடயங்களின் காரணமாக அதிகளவான புத்தகங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாதவாறு அழிவடைந்திருந்தன. | | நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ''ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக திணைக்களத்தால் அறிந்துகொள்ளப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடுகள் சம்பந்தமாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ளும் நடைமுறைகள் திட்டங்களுக்கு உள்ளடக்கப்பட்டு அந்த இலக்குகள் அடைந்து கொள்ளப்பட வேண்டிய மையப்புள்ளிகளும் இலக்குகளை அடைந்து கொள்வதனை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தில் சேவைகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கும் உள்ளகக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்கும் திணைக்களத்தின் கிளைகளுக்கு மத்தியில் உள்ள இடமாற்றங்களை 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கொள்ள வேண்டிய போதிலும், ஒரு கிளைக்குள் | முறையான உள்ளக இடமாற்றம் செய்யும் நடைமுறைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | திணைக்களத்தின் பிரதான பிரிவுகளில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் கடமை விடயங்கள் பிரதானிகள் ரீதியாக பல்வகைப்படும். அந்த உத்தியோகத்தர்கள் விடய சிறப்புத் தன்மைகளின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | 5 ஆண்டுகுளுக்கும் 19 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் 31 ஆகும். | | தயாரிப்புக்களின் போது பல்வேறு செயற்பாடுகளுக்கு இடங்கள் வழங்கப்பட்டு பாடப்புத்தகங்களின் தயாரிப்பின் போது பல்வேறு கடமைகளுக்கு ஈடுபடுத்தப்படுகின்றார்கள். |
| (ஆ) | அங்கீகரித்த ஆளணியில் 02 அச்சிடல் இயந்திர செயற்பாட்டாளர் பதவிகள் காணப்பட்டிருந்தும் அதற்காக ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அச்சிடல் இயந்திர செயற்பாட்டாளர் பதவிக்காகவும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்து மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் கலந்துரையாடப்பட்டன. மேலதிக ஒழுங்கு விதிகளைத் திட்டமிடுவதற்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றது. |